THIRUVALLUR AT POONAMALLEE.
MCOP.No.182/2022
C/W MCOP.Nos.179/2022, 180/2022, 181/2022, 183/2022, 184/2022

Deposition of witness for the Petitioner/PW4
solemnly by Tmt.K.Shanthi, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 06-02-2026

| | | | |
|---|---|---|---|
| Name | : பிரபு | Village | : |
| Father's / Husband's Name | : | Calling | : |
| Age | : | Taluk | : |

**முதல் விசாரணை**

நான் MCOP.182/2022 வழக்கின் மனுதாரரின் பாதுகாவலர். நான் சொல்லக் கூடிய சங்கதிகளை சத்தியப் பிரமாணம் செய்து எழுத்து பூர்வமாக தாக்கல் செய்கிறேன். அதை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

- Accident Registration copy of Melmaruvaththur Adhiparasakthi Hospital Ex.P30
- Petitioner's Aadhar Card copy Ex.P31
- Petitioner's Bank Pass Book copy Ex.P32
- Petitioner's Pan Card copy Ex.P33.

மனுப்படி தீர்ப்பு செய்ய வேண்டும்

**3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த விபத்து சம்பவத்தை நேரில் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. திருவண்ணாமலை கோவிலுக்கு செல்லும்பொழுது தான் இந்த விபத்து நடைபெற்றது. சம்பவ சாலை அகலமான சாலை. சம்பவத்தின்போது நாங்கள் பயணம் செய்த 1ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வேனுக்கும் 3 ஆம் எதிர்மனுதாரருடைய வாகனத்திற்கும் நடுவில் ஒரு அடையாளம் சொல்லப்படாத வேன் வந்தது என்றாலும் அந்த வேனில் மோதாமல் இருக்க 1ஆம் எதிர்மனுதாரருடைய வாகனம் சாலையின் நடுவில் இருந்த சென்டர் மீடியனில் மோதி எங்களது வாகனத்தின் மீது மோதியது என்றால் சரிதான். இந்த இரண்டு வாகனங்களுக்கும் நடுவில் வந்த வாகனத்தை இந்த மனுவில் நான் சேர்க்காததால் என்னுடைய கோரிக்கை பாதிக்கப்பட்டுள்ளது

என்றால் சரியல்ல. என்னுடைய மகன் நித்திஷ் மருத்துவமனையில் 2 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். என்னுடைய வருமானத்தை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கோரியுள்ள இழப்பீடு அதிகபட்சமானது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**